நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட

சுதந்திரப் போராட்டத் தியாகிகளை கௌரவப்படுத்தியது கழக அரசு!

மாமன்னர் மருதுபாண்டியர்கள் சிலைக்கு மாலை அணிவித்த முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை அக். 26 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் 225வது ஆண்டு குருபூஜை நிகழ்ச்சியில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டு இன்னுயிர்நீத்த தியாகசீலர்கள், தமிழ் மொழிக்காக போராடியவர்கள் ஆகியவர்களை தி.மு.க அரசு மதித்து மரியாதை செய்து வருகிறது. அப்போதைய முதல்வர் தலைவர் கலைஞர் , திராவிட மாடல் நாயகர் தளபதி ஆகியோர் அவர்களின் தியாகத்தினை போற்றும் வகையில் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தும், திருவுருவச் சிலைகள் அமைத்தும் சிறப்பு செய்துள்ளார்கள். அவ்வாறு சிறப்பு செய்த காரணம் அவர்களது வரலாற்றினை வருங்கால சந்ததியினர், இளைய தலைமுறை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

எஸ்.எஸ்.தென்னரசு - தா.கிருட்டிணன் கோரிக்கை நிறைவேற்றம்!

சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திரப் போராட்டத்திற்காக ஏராளமான வர்கள் இன்னுயிர் நீத்துள்ளார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள் ஆவார்கள். மாமன்னர் மருது பாண்டியர்களின் வீரச் செயலுக்கு மரியாதை செய்திடும் வகையில் கழக அமைப்பு செயலாளர் எஸ்.எஸ். தென்னரசு, முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் ஆகியோர் தலைவர் கலைஞர் அவர்களிடம் மருதிருவருக்கு மணிமண்டபம் சிலைகள் அமைத்தும் அரசு விழாவாக நடைபெற வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர். அதை தலைவர் கலைஞர் ஏற்று மணிமண்டபம் அமைத்து சிலையும் அமைத்தார்.

அதைத் தொடர்ந்து தலைவர் கலைஞர் வழியில் கடந்த ஐந்தாண்டு கால திராவிடமாடல் நாட்டின் சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்ட பாகனேரி வாளுக்கு வேலி அம்பலத்திற்கு அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று நகரம் பட்டியில் ருபாய் 50 லட்சத்தில் நினைவு மண்டபமும் சிலையும் அமைத்தார்.

அதே போல் உத்தமர் காந்தியடிகள் கம்யூனிஸ்ட் கட்சியின் முது பெரும் தலைவர் தோழர் ஜீவாவை சந்தித்த சிறாவயலில் சிறப்



புற ருபாய் 4 கோடி மதிப் பீட்டில் அழகிய மண்டபம் மற்றும் அரங்கம் கட்டி சிலையும் அமைத்து கொடுத்தார் சிவகங்கை பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தலைநகர் சிவகங்கையில் ருபாய் 50லட்சத்தில் மாமன்னர் மருது பாண்டியர்களின் சிலையினை அமைத்தார். இதே போல் அருகில் ராணி வேலுநாச்சியார் படையில் பணியாற்றிய தளபதிகுயிலி திருஉருவச்சிலையை அமைத்தார்.

மொழிக்காக பாடுபட்டவர்களை கௌரவித்த தி.மு.க. அரசு!

இது தவிர காரைக்குடியில் கவிஞர் முடியரசனாருக்கு மணிமண்டபம் அமைத்து அவருக்கு பெருமை சேர்த்தார். .இவற்றை திறந்து வைத்தார். இவ்வாறு மொழிக்காக பாடுபட்டு உயிர்நீத்தவர்கள் நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களை திராவிட முன்னேற்றக் கழகம் முதல்வர் தளபதி தலைமையிலான அரசு தொடர்ந்து கௌரவப்படுத்திவந்துள்ளது. கழகம் ஆட்சிக்கு வரும் போது எல்லாம் மொழிக்காக போராடியவர்கள் , நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட வர்கள் கௌரவப்படுத்தப்பட்டு வருகிறார்கள்.இத்தகைய தியாகசீலர்களில் வரலாற்றினை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண்டும் .இது அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

வாக்களித்தவர்களை ஏமாற்றிய விஜய்!

ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்று த.வெ.க.விற்கு மக்கள் வாக்களித்தார்கள். அவ்வாறு வாக்களித்த மக்கள் இன்று விலைவாசி ஏற்றம், ஆட்சியில் தினசரி நடக்கும்வன்முறை சம்பவங்கள் போன்றவற்றினால் ஏன் வாக்களித்தோம் என்று வருத்தத்தில் உள்ளார்கள் நான் வாக்களித்தவர்களை பற்றி குறை கூற விரும்பவில்லை. மாற்றத்திற்காக முதல்வர் விஜய் ஏதாவது செய்து விடுவார் என்று எதிர்பார்த்து அவர்கள் நம்பி வாக்களித்தார்கள். அவ்வாறு வாக்களித்தவர்கள் இன்று ஏன் வாக்களித்தோம் என்று வருத்தத்தில் உள்ளார்கள்.

நம்பி வாக்களித்தவர்களை முதல்வர் விஜய் ஏமாற்றியுள்ளார் .


இந்த ஆட்சியில் விலைவாசி தினசரி ஏறிக் கொண்டிருக்கின்றது. விலைவாசியை தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏதும் இல்லை .கொலை, கொள்ளைகள், பாலியல், மற்றும் வன்முறை சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதையெல்லாம் த.வெ.க. அரசு தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரியவில்லை.

விலைவாசி உயர்வதற்கு ஒன்றியத்திலும்,தமிழ்நாட்டிலும் எங்களது ஆட்சி இல்லை .பா.ஜ.க த.வெ.க. கூட்டணி என்பது தற்பொழுது வெளிப்பட்டு வருகிறது .அவர்கள் மறைமுகமாக செயல்பட்டாலும் அவ்வாறு அவர்கள் செயல்படுவது மக்களுக்கு நன்றாக தெரிந்துள்ளது.

இவ்வாறு கே.ஆர். பெரிய கருப்பன் கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்,டி.ஆர்.பி.ராஜா. திருமதி தமிழரசி ரவிக்குமார் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ். ஏ. வல்லபாய், ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துகுமார் ஆகியோர் இருந்தனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; பக்கத்து மாவட்டத்தில் அமைச்சர் ஒருவர் அதிகாரிங்கெல்லாம் ஒழுங்கா வேலை செய்யறதில்லைன்னு மாவட்டக் கூட்டத்திலே 'ஓப்பனா' பேசினாராமே! தெரியுமா?

போண்டி : **ஆமாய்யா; நானும் படிச்சேன். தி.மு.க. ஆட்சியிலே போட்ட திட்டங்களை எல்லாம் ரத்து செஞ்சிட்டாங்க. எல்லா டிபார்ட்மெண்ட்லேயும் காலி இடத்தை ஃபுல் பண்ணல. இந்த நிலையிலே இருக்கறவங்களை தட்டிக் கொடுத்துதான் வேல வாங்கணும். இல்லன்னா நடக்கற வேலையும் நடக்காது. திடீர்னு அமைச்சர் ஆனவர்க்கு இது எங்க தெரியப் போவுது.**

மாற்றுத் திறனாளிகளுக்கு மார்ச் மாதத்திற்குப் பிறகு பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படாதது ஏன்? எங்கள் உரிமைகள் எங்கே?

'வெற்றி பயணம்' திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

தி.மு.க. மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.தீபக் நாதன் கேள்வி!

சென்னை, அக்.26–

"மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் ஆய்வை சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி நடத்துவது ஏன்? துறை முதலமைச்சரின் நேரடிப் பொறுப்பில் இருக்கும்போது, சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் ஆய்வுக் கூட்டத்தை நடத்துவது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் நிர்வாகப் பொறுப்பு யாரிடம் உள்ளது? அத்துறையின் செயல்பாடுகள், நிதி ஒதுக்கீடு, நலத்திட்டங்களின் அமலாக்கம் ஆகியவற்றில் முடிவெடுக்கும் அதிகாரம் யாருக்கு இருக்கிறது? துறையைத் தனது நேரடிப் பொறுப்பில் வைத்திருக்கும் முதலமைச்சர், அந்தத் துறையின் ஆய்வை ஏன் நேரடியாக மேற்கொள்ளவில்லை?

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முதலமைச்சரின் நேரடிப் பொறுப்பில் இருக்கும்போது, அத்துறையின் ஆய்வை சமூக நலத்துறை அமைச்சர் மேற்கொள்வதற்கான நிர்வாக அடிப்படை என்ன? இதுகுறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளின் நலன் தொடர்பான முடிவுகள் உரிய நேரத்தில் எடுக்கப்படுவதையும், நலத்திட்டங்கள் தடையின்றிச் செயல்படுத்தப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டியது அரசின் அடிப்படைக் கடமையாகும்.

மார்ச் மாதத்திற்குப் பிறகு பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்படவில்லையே! முதலமைச்சருக்குத் தெரியுமா?

மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித்தொகை கோரி விண்ணப் பித்துள்ள பலருக்கு மார்ச் மாதத்திற்குப் பிறகு இதுவரை நிதியுதவி வழங்கப்படவில்லை என்ற குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

பிறரின் உதவியின்றி அன்றாட வாழ்க்கையை நடத்த முடியாத பல மாற்றுத்திறனாளிகளுக்கு இந்தப் பராமரிப்பு உதவித்தொகை என்பது அவர்களின் வாழ்வாதாரத்திற்கான முக்கிய ஆதாரமாகும். இத்தகைய சூழலில், உதவித்தொகை கிடைக்காமல் மாதக்கணக்கில் காத்திருப்பது அவர்களையும் அவர்களது குடும்பங்களையும் கடுமையாகப் பாதிக்கிறது.

இந்த நிலை முதலமைச்சருக்குத் தெரியுமா? நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்டுள்ள சிக்கலா அல்லது நிர்வாகத் தாமதமா? தகுதியுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கப்படாததற்கான காரணத்தை அரசு வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

நிலுவையில் உள்ள விண்ணப்பங்களை உடனடியாகப் பரிசீலித்து, தகுதியுடைய அனைவருக்கும் உரிய நிதியுதவியை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விடியல் பயணத்தில் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய அரசு, வெற்றி பயணத்தில் ஏன் புறக்கணிக்கிறது?

கடந்த திமுக ஆட்சியின்போது பெண்களுக்கான விடியல் பயணத் திட்டம் தொடங்கப்பட்ட போது, அதில் மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்க வேண்டும் என்று டிசம்பர் 3 இயக்கம் கோரிக்கை விடுத்தது. அந்தக் கோரிக்கையை ஏற்று, மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் திட்டம் அமல்படுத்தப்பட்டது.

மாற்றுத்திறனாளிகளின் தேவைகளை உணர்ந்து, அவர்களையும் அரசின் நலத்திட்டங்களில் உள்ளடக்க முடியும் என்பதற்கு இது ஒரு முன்னுதாரண மாக அமைந்தது.

ஆனால், தற்போது 'வெற்றி பயணம்' திட்டத்திலும் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுவார்கள் என்று சட்டமன்றத்தில் சமூக நலத்துறை அமைச்சர் அறிவித்ததாகக் கூறப்படும் நிலையில், அந்த அறிவிப்பு ஏன் இன்னும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை?

சட்டமன்றத்தில் அறிவிப்புகளை வெளியிடுவது மட்டுமே அரசின் கடமையா? அந்த அறிவிப்புகள் மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டாமா?

விடியல் பயணத் திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய அரசு, வெற்றி பயணத் திட்டத்தில் அவர்களுக்கான பயன்களை உறுதிப்படுத்துவதில் ஏன் தாமதிக்கிறது? இதற்கான விளக்கத்தை அரசு அளிக்க வேண்டும்.

துறை யாருடைய பொறுப்பில் இருந்தாலும், மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்!

மாற்றுத்திறனாளிகளின் நலத் திட்டங்கள் என்பது அரசின் கருணையால் வழங்கப்படும் சலுகைகள் அல்ல; அவை சமத்துவத்துடனும் கண்ணியத்துடனும் வாழ்வதற்கான உரிமைகள்.

எனவே, தமிழக அரசு உடனடியாக:

1. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் நிர்வாகப் பொறுப்பு மற்றும் முடிவெடுக்கும் அதிகாரம் தொடர்பாகத் தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டும்.

2. சமூக நலத்துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் ஆய்வை மேற்கொள்வதற்கான நிர்வாக அடிப்படையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

3. மார்ச் மாதத்திற்குப் பிறகு பராமரிப்பு உதவித்தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களின் நிலை குறித்து அறிக்கை வெளியிட வேண்டும்.

4. தகுதியுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு நிலுவையில் உள்ள பராமரிப்பு உதவித்தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

5. 'வெற்றி பயணம்' திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெறுவதற்கான நடைமுறைகளை விரைந்து அமல்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு உரிமைக்காகவும் மாற்றுத்திறனாளிகள் வீதிக்கு வந்து போராட வேண்டுமா?

மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் முன்வைக்கப்படும்போது அறிவிப்புகளை வெளியிடுவதும், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய நேரத்தில் தாமதிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் பொறுப்பு யாரிடம் உள்ளது என்ற நிர்வாகக் குழப்பத்திற்கும், நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதில் நிலவும் தாமதத்திற்கும் அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் அறிவிப்புகளோடு முடிந்துவிடக் கூடாது; அவை நடைமுறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதுவே உண்மையான சமூக நீதி!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சிவ. செந்தில்குமார்

அக்டோபர் 26 (2025)



மாணவப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்.

குண்டடம் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர், ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஆரத்தொழுவு பஞ்சாயத்து தலைவராகவும், குண்டடம் ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

ஈரோடு மாவட்ட மருந்து வணிகர்கள் சங்க செயலாளர், திருப்பூர் மாவட்ட விளையாட்டு துறை உறுப்பினர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

திருப்பத்தூரில் மாமன்னர் மருது பாண்டியர்கள் குருபூஜை!

அமைச்சர்களை தவிர்த்து தனியாக மரியாதை செலுத்திய த.வெ.க. எம்.எல்.ஏ.!

சிவகங்கை அக்.26-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் நேற்று முன் தினம் 24ஆம் தேதி மாமன்னர் மருது சகோதரர்களின் 225வது ஆண்டு குருபூஜை நடைபெற்றது. இந்த குருபூஜை நிகழ்ச்சியில் த.வெ.க. சார்பில் அமைச்சர்கள் நிர்மல் குமார், டி. கே பிரபு மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் காலை 9:30 மணி அளவில் மருதுபாண்டியர்கள் குருபூஜையில் பங்கேற்று அரசு சார்பில் மரியாதை செலுத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அமைச்சர்கள் காலை 10 மணிக்குமேல் தாமதமாக வந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் திருமதி குழந்தை ராணி நாச்சியார் அமைச்சர்கள் வருகைக்கு முன்பாகவே அவரது ஆதரவாளர்களுடன் சென்று மருது பாண்டியர்கள் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு புறப்பட தயார் ஆனார்.

அப்பொழுது அங்கிருந்த த.வெ.கவினர் அமைச்சர்கள் வருவதற்கு முன்பாகவே மாலை அணிவித்து விட்டீர்கள் . அமைச்சர்கள் வரவேண்டும் என்று கூறினார்கள். அதனால் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் அமைச்சர்கள் வருகைக்காக காத்து நின்றார்.

அவ்வாறு காத்திருந்த சிவகங்கை தொகுதி எம்.எல்.ஏ குழந்தை ராணி நாச்சியாரை கனிமவளத்துறை அமைச்சர் டி .கே .பிரபு உடன் அழைத்துச் சென்றார் . அமைச்சர்களுடன் எம்.எல்.ஏ குழந்தை ராணி நாச்சியார் பங்கேற்றார்.

தொடர்ந்து சிவகங்கை எம்.எல்.ஏ இவ்வாறு அரசியல் நிகழ்ச்சிகளில் தனி ஆவர்த்தனம் நடத்தியது குருபூஜைக்கு வந்தவர்களிடையே பரபரப்பாக பேசப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில்

கனமழை : பலத்த சேதம்!

பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

உதகை, அக். 26-

நீலகிரி மாவட்டத்தில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக ஊட்டி, குன்னூர் கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக குன்னூர் மேட்டுப்பாளையம் மலைப்பாதையில் கடுமையான சேதம் ஏற்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், மாவட்ட நிர்வாகம் அவசர அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், "இந்திய வானிலை ஆய்வு மையம் மிக கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் மிக கனமழை பெய்துவருவதால் சாலைகளில் மரங்கள் விழுந்தும் மண்சரிவுகள் ஏற்பட்டும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் நீலகிரி மாவட்ட த்திற்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும், மிக கனமழை பெய்யும் என முன்னறிவிப்பு உள்ளதால் அடுத்த மூன்று நாட்களுக்கு வானிலை சீராகும்வரை நீலகிரி மாவட்டத்திற்கு வருகை புரிவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,புளியங்குளம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடையில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருள்களின் தரம் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார்.நிகழ்வில் துணைப் பதிவாளர் சுப்புராஜ், கூட்டுறவு சார்பதிவாளர் முருகலட்சுமி, கூட்டுறவு செயலாளர் ராமசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து, புளியங்குளம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயலட்சுமி, ராஜகோபால்,கிளைச் செயலாளர் கருப்பசாமி கழக நிர்வாகிகள் சிலம்பரசன், முனியசாமி தகவல் தொழில் நுட்ப அணி கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.